# திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாடு எதிர்கொள்ளும் சவால்கள்: மொழி, பண்பாட்டுக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டவொரு ஆய்வு

Dr. AFM.Ashraff,
Senior Lecturers in Tamil,
Department of Languages,
South Eastern University of Sri Lanka.

**அறிமுகம்:**

திருகோணமலை நகரம், பல்லின சமூகங்கள் வாழும் ஒரு பிரதேசம். சமயரீதியாக இந்துக்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள் ஆகியோர் வாழ்கின்றனர். சமூகரீதியாகச் சிறுபான்மையினரான பறங்கியரும் மலாயரும் இங்கு வசிப்பதும் குறிப்பிடத்தக்கது. பிரதானமாக சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. சிறுபான்மையாக, போர்த்துக்கீஸ், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் வீடுகளில் பேசப்பட்டு வருகின்றன. திருகோணமலை நகரத்தைத் துறைமுக நகரம் என்றும் சிறப்பாக அழைப்பதுண்டு. உலகின் இரண்டாவது இயற்கைத் துறைமுகமாகத் திருகோணமலைத் துறைமுகம் விளங்குவதே அதற்கான காரணமாகும். அதனால் இயற்கை வளங்கள் நிறைந்த திருகோணமலை நகரம், இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகவும் விளங்குகிறது. இரண்டாம் உலகப்போரின்போது திருகோணமலை நகரின் முக்கியத்துவம் உலகளாவியரீதியில் உணரப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் படையினர் பயன்படுத்திய மிகப்பெரும் பரப்பைக்கொண்ட கடற்படைத் தளமொன்றும் விமானப்படைத் தளமொன்றும் பாரிய எரிபொருள் சேகரிப்புக் குதங்களும் திருகோணமலையில் தற்போதும் பயன்பாட்டிலுள்ளன. வடக்கு - கிழக்கைத் தமிழர் தாயகமாகக் கொள்வதில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டின் அடித்தளமும் திருகோணமலை நகரத்தை மையப்படுத்தியதாகவே உள்ளது. வரலாற்றுரீதியாகவும் முக்கிய தளமாக விளங்கும் திருகோணமலை நகரம், உலகளாவியரீதியல் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தளமாகவும் நாடளாவியரீதியில் வணிகர்களை ஈர்க்கும் ஒரு வணிகத் தளமாகவும் இன்று முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ஆனால், திருகோணமலை நகரத்தை ஒரு சுற்றுலாத் தளமாகவோ, வணிகத்தளமாகவோ கொள்ளும் கட்டமைப்பு வசதிகள் கொண்ட முன்னெடுப்புக்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. சுதந்திரத்திற்குப்பின் இலங்கை ஒரு குடியரசாக மாறும்வரை திருகோணமலை நகரம் பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. பிற்பட்ட காலங்களில் இனமுரண்பாடு தலையெடுக்கத் தொடங்கியிருந்தது. இவ்விரு காரணிகளும் ஆட்சியாளர்களுக்கு திருகோணமலை நகரை பல்துறைகளிலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை

இதுவரை வழங்கியிருக்கவில்லை. இன முரண்பாட்டின் வெளிப்பாடாகத் தொடங்கியிருந்த போர், கடந்த ஆட்சியில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இன முரண்பாடு நிலவிய காலத்தில் திருகோணமலை நகரில் திட்டமிட்ட குடியேற்றங்களும் அத்துமீறிய குடியேற்றங்களும் பெருமளவில் நிகழ்ந்தன. அதனால் திருகோணமலை நகரின் இயற்கை வளங்களும் அரச வளங்களும் திட்டமிடாத வகையில் வீணடிக்கப்பட்டுள்ளன. இருப்புவழி, தரைவழி, கடல்வழி, ஆகாயவழிப் போக்குவரத்து வசதிகள் கொண்ட திருகோணமலை நகரம் ஒப்பீட்டளவில் பல்வேறு வழிகளிலும் பின்னடைவையே கண்டிருக்கிறது. திருகோணமலை நகரில் கோட்டை – கோணேஸ்வரர் ஆலயச் சூழலில் நகர சபைக்குச் சொந்தமான இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசங்கள் பெரும்பான்மை இன மீனவர்களால் அத்துமீறிக் கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு மிகப்பெரும் கல்வி நிறுவனமாக மாற்றப்பட்டிருக்கவேண்டிய உணவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான சீனக்குடா அரிசிக் களஞ்சியசாலை இலங்கை இராணுவத்தினரின் மீளணி இருத்துதல் முகாமாக மாற்றப்பட்டிருக்கிறது. பளிங்குக் கடற்கரை உட்பட பல சிறு தீவுகள் கொண்ட பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இவ்வாறானவொரு சூழலில் திருகோணமலை நகரை மையப்படுத்திய சுற்றுலாத்துறை மேம்பாடு பல சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அச்சவால்களை மொழி, பண்பாடு ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு இனங்காண முயற்சிப்பதாகவே இவ்வாய்வு அமைகிறது.

- பெரும்பான்மை – சிறுபான்மை வர்க்க நலன்களுக்கப்பால், இலங்கையின் நிலைத்திருக்கக் கூடியதான அபிவிருத்திக்கு திருகோணமலை நகரின் பங்களிப்பைச் செய்வதற்கான வாய்ப்பினை அடையாளப்படுத்தல்.

- பல்லின சமூகங்கள் வாழும் சூழலில் நல்லிணக்கத்தைப் பேணுவதூடான சுமூக வாழ்க்கைக்கும் அதன் மேம்பாட்டுக்கும் கூட்டுழைப்பின் அவசியத்தை உணரச் செய்தல்.

- திருகோணமலை நகர மேம்பாட்டிற்கான வாய்ப்பினை முன்னிறுத்தி, இனங்களுக்கிடையிலான மொழி – பண்பாட்டு இடைவெளியைக் குறைத்து, முரண்பாடற்ற ஒரு நகரச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்

ஆகியன இவ்வாய்வின் நோக்கங்களாகக் கொள்ளப்பட்டன.

வடக்கே குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு, தெற்கே கிண்ணியாப் பிரதேச செயலகப் பிரிவு, மேற்கே தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவு, கிழக்கே கடல்

ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்ட திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்பட்டது.

திருகோணமலை நகர சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு முன்னெடுப்புக்களில் இருந்து அவதானங்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களும் கள ஆய்வினூடாகப் பெறப்பட்ட தரவுகளும் இவ்வாய்வுக்கான முதலாம் நிலைத்தரவுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

இன – மத – மொழிசார் சமூகக் குழுக்கள், அழுத்தக் குழுக்கள், முதலீட்டாளர்கள், அரசியல் பிரமுகர்களுடனான இலக்குக் குழு உரையாடல், சுற்றுலாத் துறைசார் - கல்விசார் வல்லுனர்களுடனான குழுக் கலந்துரையாடல் முதலானவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பெறப்பட்டன.

திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலான உணர்வலைகள் பின்னூட்டல்கள் முதலானவற்றைப் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. திரட்டப்படும் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல் முதலான ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டன. பகுப்பாய்வையும் மதிப்பீட்டையும் விளக்கியுரைக்க ஒப்பீட்டு விவரண முறைமையும் கையாளப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்:** சுற்றுலாத்துறை, மேம்பாடு, வணிகத்தளம், வளங்கள்

## உரையாடல்:

திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாடு மொழி, பண்பாட்டுக் காரணிகளால் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தை எல்லையாகக் கொண்ட நாயாற்றுக்கும் தெற்கே மட்டக்களப்பு மாவட்டத்தை எல்லையாகக் கொண்ட வெருகலாற்றுக்கும் இடையே விளங்கும் மிக நீண்ட கடற்கரைப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்தை வளப்படுத்தி நிற்கிறது. பாங்கொக், இந்தோனேசியாவின் பாளி, ஹொங்கொங், மலேசிய நகரங்கள் கொண்டுள்ள சுற்றுலாத்துறை வளச்செழுமைகள் இப்பிரதேசத்தில் நிறைந்து காணப்படுகின்றன. எனினும், அரசியல், சமூக, பண்பாட்டு நோக்கில் இப்பிரதேசம் சிக்கல் நிறைந்த அமைப்பினை உடையதாக விளங்குகிறது.

அரசியல் ரீதியாக இப்பிரதேசம் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு விளங்குகிறது. அதன் விளைவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இப்பிரதேசங்களின்

ஊராட்சி மன்றங்களை வசப்படுத்தி வைத்திருக்கின்றது. இப்பிரதேசத்தின் பெருநிலப்பரப்பை உள்ளடக்கியிருக்கும் திருகோணமலை நகராட்சி மன்றம், திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச சபை, குச்சவெளி பிரதேச சபை, ஈச்சிலம்பற்று பிரதேச சபை ஆகியன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊரரட்சியின் கீழேயே காணப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நடத்தை ஓர் எதிர்ப்பரசியல் நடத்தையாகவே திகழ்கிறது. மத்திய அரசுடன் இணைந்து பயணிக்கும் இணக்க அரசியல் நடத்தையின்மையால் நகரத்தின் சுற்றுலாத்துறை மேம்பாடு குறித்த முன்மொழிவுகளை முன்வைக்கவோ, நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று சுற்றுலாத்துறையை மேம்படுத்தவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முடிவதில்லை. இன முரண்பாடே இவ் எதிர்ப்பரசியலின் அடிநாதம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக நோக்கில் தமிழர் சமூகம் ஒரு கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்பைக் கொண்டு இயங்குவதில்லை என்பதும் கவனத்துக்குரியது. கல்வியில் அதிக கவனஞ்செலுத்தும் தமிழர் சமூகம் அரச தொழிலை பெருவாரியாகச் செய்வதற்கான எதிர்பார்ப்புடையதாக விளங்குவதனால் வர்த்தக ரீதியான முதலீடுகளில் அதிக கவனஞ் செலுத்துவதில்லை. பொருளாதாரச் செழிப்படையோராகப் பலர் திகழ்ந்தாலும், 1980களில் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து நாடு திரும்பிய சிலரே சுற்றுலாத்துறையில் முதலீடுகளைச் செய்துள்ளனர். சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்குதவும் பெருநிலப்பரப்பும் இப்பிரதேசத் தமிழர்களுக்கே உரித்துடையதாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக, கல்வியிற் சிறந்து, பொருளாதாரத்திற் செழித்து, வளத்தில் மிகுந்து விளங்கும் தமிழர் சமூகம் பிரதேச மேம்பாட்டில் சிரத்தையின்றி பாராமுகமாய் இருப்பதுவும் சுற்றுலாத்துறை எதிர்கொள்ளும் சவால்களுள் ஒன்றாக விளங்குகிறது. இப்பிரதேச தமிழர் சமூகம், சுற்றுலாத்துறை மேம்பாட்டில் அக்கறை செலுத்தாமைக்குக் காரணம், 'சமூகப் பிறழ்வும் சமூகச் சீரழிவும் நிகழலாம் என்ற நியாயமான அச்சமே' என்ற கருத்து பலராலும் முன்வைக்கப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கருத்து வாதப்பிரதிவாதத்திற்குரியது. ஏனெனில், இன்று மலேசியா, கட்டார் போன்ற கட்டுப்பாட்டுடனும் முன்னுதாரணமாகவும் திகழும் நாடுகள், சுற்றுலாத்துறை மேம்பாட்டினால் பேசப்படும் நாடுகளாக மாறியிருகின்றன.

பண்பாட்டு நோக்கில் பரவலாகப் பேசப்படும் பயவுணர்வும் சுற்றுலாத்துறை மேம்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றது. வரலாற்று நோக்கில் புனித பிரதேசமாகப் பேசப்படும் திருகோணமலையில் பண்பாட்டுச் சிதைவு நேர்ந்துவிடக் கூடாது என்ற நோக்கமும் திருகோணமலைப்பிரதேச சுற்றுலாத்துறை மேம்பாட்டைக்

கேள்விக்குள்ளாக்கியுள்ளது. சுற்றுலாத்துறை மேம்பாடு பாலியல், வன்முறை, போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் முதலான அம்சங்களின் பெருக்கத்துக்குக் காரணமாகிவிடலாம் என்ற அச்சம் மதரீதியாக இந்துக்களிடமும் இஸ்லாமியரிடமும் நிலவுகிறது. பாலியல், வன்முறை முதலானவற்றால் இளையோர் பாதிக்கப்படலாம் என்ற எண்ணமும் மதுக்கடைகளின் பெருக்கம் குடிகளைக் கெடுக்கும் என்ற கருத்தும் மேலைத்தேய சுற்றுலாப் பயணிகளின் சகவாசத்தால் போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் ஆகியன நிகழலாம் என்ற எதிர்வு கூறலும் பிரதேச மக்களை அச்சத்திற்குள்ளாக்கியிருக்கின்றன. ஆனால், அண்மைய உலகப்போக்கில் இவை தவிர்க்க முடியாதனவாக மாறிவருகின்றமை கண்கூடு.

இன்றைய தகவல் தொழிநுட்ப யுகத்தில், பூகோள மயமாதலின் விளைவால், நிலத்தொடர்பற்ற வகையில் மேற்குறித்த அம்சங்கள் பண்பாட்டுச் சிதைவினை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்றைய தலைமுறையினர் தம்மோடு தொடர்பில்லாத சினிமாத்துறையின் செல்வாக்கினால் சண்டியர்களாக வீதிகளில் வாள்களோடு திரிவதும் இளம்பெண்களின் பின்னால் அலைந்து அலைக்கழிவதும் புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகளின் அனுசரனையால் கிடைக்கும் பணம், பல்லூடக வசதிகள் ஆகியவற்றால் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைப்பொருள் பாவனை, வாகன விபத்து என வாழ்வைத் தொலைத்து நிற்பதும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. கூட்டிக்கழித்துப் பாரக்கையில் சுற்றுலாத்துறை மேம்பாடு இவற்றைவிட வேறு பெருந்தாக்கங்களை ஏற்படுத்தப் போவதில்லை.

இவ்வாறான சமூகச் சீரழிவு, பண்பாட்டுச் சிதைவு குறித்த அச்சங்கள் திருகோணமலை நகரை ஒரு கட்டமைப்பற்ற நகராக மாற்றி வருகின்றன. சுற்றுலா மேம்பாட்டை மையமாக வைத்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய செழுமைமிக்க பல பிரதேசங்கள், திட்டமிட்ட குடியேற்றங்களாலும் அத்துமீறிய குடியேற்றங்களாலும் மறைமுகமாக சீரழிவுக்குட்படுத்தப்படுகின்றன. கோணேசர் கோயிலை அண்டிய தீர்த்தக்கரை இன்று பெரும்பான்மை இனத்தவர்களால் அத்துமீறிப் பறிக்கப்பட்டுள்ளன. அதனை அண்டிய சூழல் மதுக்கடைகளாலும் மாமிசக் கடைகளாலும் நிரம்பி வழிகிறது. அழகிய கரையோரங்கள் தென்பகுதி மீனவர்களால் நிரம்பி வழிகிறது. மிதக்கும் சந்தைகளாக(Floating Market)த் திகழவேண்டிய பல இடங்கள் குப்பை கூழங்களாலும் கட்டிடக் கழிவுகளாலும் நிறைந்து போயுள்ளன. உல்லாசப் பயணிகளால் நிரம்பி வழியும் ஓய்வகங்களைக் கொண்டிருக்க வேண்டிய புறாத் தீவு (Pigeon Island), மான் தீவு (Deer Island, கொக்குத் தீவு, பேய்த்தீவு, திருக்கைக் குடா, சீனக் குடா (China Bay), கவாட்டிக் குடா, நாச்சிக் குடா,

வேப்பங்குடா, பளிங்குக் கடற்கரை (Marble Beach) முதலிய இடங்கள் இன்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இவ்வாறான நிலைக்கு மேற்குறித்த அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணி மட்டுமல்ல, மொழியும் ஒரு பிரதான காரணியாகத் திகழ்கிறது. 1956 களில் நிலவிய ‘சிங்களம் மட்டும்’ எதிர்த்துப் போராடிய தமிழர்கள், இந்நாட்டின் பெரும்பான்மையோர் பேசும் மொழியான சிங்களத்தைக் கற்பதிலும் அசிரத்தை காட்டினர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அதற்குச் சம அந்தஸ்துக் கோரியமை நியாயமே எனினும் சிங்களத்தைக் கற்பதில் அசிரத்தை காட்டியமையை ஏற்க முடியாது. உலக அரங்கில் எங்கு சென்றாலும் அவ்வப் பிரதேசங்களில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழிகளைக் கற்பதில் மக்கள் ஆர்வமுடையோராகவே இன்றும் இருக்கின்றனர். ஈழத்தில் மட்டும் தமிழ் மொழியுணர்வு, சிங்கள எதிர்ப்புணர்வை வளர்த்து வந்துள்ளது. இவ்வுணர்வு சிங்கள மொழியை மட்டுமன்றி, சிங்கள மக்களின் மதம், பண்பாடு, வாழ்வியல், நடத்தை என எல்லாவற்றின் மீதும் செல்வாக்குச் செலுத்தியமை இந்நாட்டில் தீர்க்க முடியாதவொரு இன முரண்பாட்டைத் தோற்றுவித்திருந்தது. அவ்வுணர்வு எச்சந்தர்ப்பத்திலும் இந்நாட்டில் சிங்களவரும் தமிழரும் இணைந்து வாழ முடியாது என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இம்மனோநிலையின் பின்விளைவே, பிரதேச விருத்தியிலும் மேம்பாட்டிலும் ஒருவரோடொருவர் கலந்துரையாடி முடிவெடுத்து முன்னோக்கிப் பயணிக்க முடியாமலாக்கியுள்ளது. இது திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாடு சலால்களை எதிர்கொள்வதற்கு வாய்ப்பானதாகவும் மாறியுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க திருமலை நகரில் ஒரு அருங்காட்சியகம் கூட இல்லை. ஆனால், பல இராணுவ அருங்காட்சியகங்கள் உள்ளன. திருகொணமலை நகர சபைக்குச் சொந்தமான சந்தையில் வரி அறவிடுவதே பெரும்பாடாய் இருக்கிறது. அத்துமீறியுள்ள பெரும்பான்மையினரின் வீதியோரக்கடைகளை அகற்றுவதில் பொலிசாரின் ஒத்துழைப்புக் கூட நகர சபைக்குக் கிடைப்பதில்லை. நீதிபதிகளின் தீர்ப்பை உதாசீனம் செய்யும் பெரும்பான்மையினரை கண்டிக்கக் கூட காவலர்களால் முடிவதில்லை. 1990களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தை ஒட்டி, மக்களின் வரிப்பணத்தால் கட்டிமுடிக்கப்பட்ட திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான சந்தைக்கட்டிடத் தொகுதி பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த சந்தை வியாபாரிகளின் தலையீட்டினால் திறக்க முடியாமலாக்கப்பட்டிருந்தது. அப்போதைய ஆட்சியில் ஜனாதிபதியே நேரடியாக இதில் தலையிட்டிருந்தார். அண்மைக்காலம் வரை அதில் படையினரே நிலைகொண்டிருந்தனர். முற்குறிப்பிட்டவாறு படையினர் நிலைகொண்டிருக்கும் சுற்றுலாத்துறை மேம்பாட்டோடு தொடர்புள்ள அநேக பிரதேசங்களை விடுவித்துக் கொள்வதற்குத் தொடர்பாடலை ஏற்படுத்தும்

முயற்சிக்கான முட்டுக்கட்டையாக விளங்குவதும் மொழித்தேர்ச்சியே. சினேகபூர்வமாக உரையாடி காரியங்களை ஆற்றிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்த ஊராட்சி நிருவாகங்கள் இன்மை ஒரு துர்ப்பாக்கியமே. ஊராட்சி நிருவாகத்தினருக்கு சிங்களம் பாண்டித்தியம் இல்லை. படையினருக்கோ தமிழில் புலமையில்லை. தொடர்பு மொழியான ஆங்கிலமோ காரியத்தைச் சாதிக்கத் துணியாது. எனவே, திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்குச் சவாலாக அமைந்திருக்கும், படையினரின் பிரசன்னத்தைக் குறைத்து, நட்பார்ந்த முறையில் அவர்களை அணுகி, ஆதரவைப் பெற ஒரு மொழி அறிவு ஒரு பெருந் தடங்கலாக அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்குச் சவாலாக அமைந்திருக்கும், நடத்தையில் கீழோராகக் கருதப்படும், தென்பகுதிக் கரையோர பெரும்பான்மை இன மீனவர்களை ஆற்றுப்படுத்தி, விழிப்புணர்வை உண்டாக்க ஒரு மொழி அறிவு ஒரு பெருந் தடங்கலாக அமைந்துள்ளது.

ஆகவே, பண்பாட்டுப் பழைமைவாதம், மொழிப் பெருமைவாதம் ஆகியன களையப்பட வேண்டும். அடிப்படை வாதங்களுக்கப்பால், இவ்விடத்தில் பண்பாடு குறித்த பரந்த பார்வையும் இருமொழி அறிவும் வலியுறுத்தப்படுகின்றன. எனவே, மக்களிடையே பொதுவெளியில் பண்பாட்டுச் சீரழிவு குறித்த யதார்த்தம் தெளிவுபடுத்தப்படல் வேண்டும் அத்தோடு, இப்பிரதேச மக்கள், தமது எண்ணங்களையும் உணர்வுகளையும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ள, தத்தம் இரண்டாம் மொழிகளை கற்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ்வாய்வு பரிந்துரைக்கிறது. இவற்றுக்கான நுட்பங்களைத் துறைசார் வல்லுனர்களின் பங்களிப்போடு வகுத்துக் கொள்ளலாம்.

## முடிவுரை:

இவ்வாய்வானது திருகோணமலை நகரத்தின் முக்கியத்துவத்தினையும் அங்குள்ள சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான வாய்ப்பினையும் இனங்காண உதவியுள்ளது. அவற்றினூடாக அங்குள்ள வளங்களை இனங்கண்டு இலங்கையின் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்திக்கு திருகோணமலை நகர சுற்றுலாத்துறை வழங்கக்கூடிய பங்களிப்பினையும் சாத்தியப்பாடுகளையும் பரிந்துரைக்கிறது. அத்தோடு திருகோணமலை நகர சுற்றுலாத்துறை மேம்பாடு எதிர்கொள்ளும் மொழி, பண்பாடுசார் சிக்கல்களுக்குான தீர்வினை முன்வைத்துள்ளது.

**உசாத்துணைகள் :**

1. பிரதம செயலர் அலுவலகம், இன்றைய திருகோணமலை, திருகோணமலை: வடக்கு கிழக்கு மாகாண சபை, 1993.
2. ......................................................................, தொடர்பாடல் மொழி நவீனத்துவம், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு,
3. https://www.lanka.com/about/destinations/trincomale**e**
4. https://**www.lonelyplanet.com**/sri-lanka/the-east/**trincomalee**